


04. 08. 2026

தலைப்புச் செய்திகள்

- நீட் போராட்ட விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.
- தமிழக சட்டப்பேரவை எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் இன்று கைது செய்யப்பட்டார்.
- பொதுக்கூட்டத்தில் அவதூறாக பேசியதற்காக அவர்மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் பல்துறைகளின் சார்பில் ஆயிரத்து 738 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவடைந்த திட்டப்பணிகள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.
- ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகாரத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீது, காவல்துறையினர் தாக்குதல் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்றுகாலை கூடியதும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கை அவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன், பூஜ்ஜிய நேரத்தை எடுக்க முயன்ற போது எதிர்கட்சி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அயோத்தி ராமர்கோவில் நன்கொடை விவகாரத்தை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த காங்கிரஸ் மற்றும் சமாஜ்வாடி கட்சிகள் தற்போது நன்கொடை விவகாரத்தை எழுப்பி பொதுமக்களை தவறாக திசை திருப்புவதாக குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்ற அவை என்பது அனைத்து கட்சிகளுக்கும் பொதுவானது என்று கூறியஅவர், நோட்டிஸ் அனுப்பியுள்ள உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பளிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.

அப்போது அவையின் மையப்பகுதியில் குழுமிய எதிர்கட்சி உறுப்பினர்கள், மாணாக்கர் போராட்டத்தில் தாக்குதல்

பிரச்சனை குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பதிலளிக்க வேண்டுமென்று கோரினர்.

இதனால் அமளி நிலவவே மாநிலங்களவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையிலும் நீட் விவகார பிரச்சனை எதிரொலித்ததால் மக்களவையை, அவைத்தலைவர் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்ற குழு கூட்டம்

முன்னதாக இன்று நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் காமன்வெல்த் போட்டிகளில் சாதனைகள் புரிந்த வீரர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திரமோடி, அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங், டாக்டர் எஸ். ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

சீதாராமன்

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், வேளாண் நிலைத்தன்மையை உறுதிசெய்யவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர் குறைந்தபட்ச ஆதரவு விலை கட்டமைப்பின் கீழ் கரும்பு, தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள,; பரவலாக்கப்பட்ட வேளாண் உற்பத்தி பொருட்களை பிரபலப்படுத்த உயர் முன்னுரிமை வழங்கப்படுவதாக கூறினார்.

குறிப்பாக பருப்பு மற்றும் எண்ணெய் வித்துகளுக்கு தனி கவனம் வழங்கி, விவசாயிகள் இது சார்ந்த நடைமுறைகளை பின்பற்ற ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழக சட்டப்பேரவை எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னை நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்டார்.

பெண் வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 9 பிரிவுகளின் கீழ் காவல்துறையினர் அவரை கைது செய்துள்ளனர்.

தஞ்சையில் நேற்று நடைபெற்ற காவிரிநீர் விவகாரம் தொடர்பான பொதுக்கூட்டத்தில் அவதூறாக பேசியதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் தஞ்சை காவல்துறையினர் அவரை கைது செய்துள்ளனர்.

திரு. உதயநிதி தஞ்சை நடுவர் நீதிமன்றத்தில் இன்று ஆஜர் படுத்தப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

இதனிடையே தமிழகத்தின் பல்வேறு மாவட்ட தலைநகரங்களில் திரு. உதயநிதியின் கைதை எதிர்த்து தி.மு.க.வினர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க.வினர், திரு. உதயநிதியின் கைதை எதிர்த்து இன்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், உதயநிதிக்கு நாவடக்கம் தேவை என்று கூறியுள்ளார்.

நாளை பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் இன்றைய தினம் சட்டமன்ற எதிர்கட்சி தலைவரை கைது செய்துள்ளது அரசியல் நோக்கம் கொண்டது என்று குற்றம் சாட்டியுள்ளார்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், உதயநிதியின் பேச்சுக்கும், அவரை கைது செய்ததற்கும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பெண்களை அவதூறாக பேசுபவர்கள் யாராக இருந்தாலும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் அவசியம் என்று இடதுசாரி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார், உதயநிதி நேற்று பொதுக்கூட்டத்தில் பேசியதற்கு அவர்மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதனிடையே திரு. உதயநிதி கைதுக்கு எதிரான வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் இன்று பிற்பகல் இரண்டேகால் மணிக்கு விசாரணை வருகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் சுகாதாரம், உயர்கல்வி, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகளின் கீழ், ஆயிரத்து 738 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு. விஜய் காணொலி மூலம் இன்று தொடங்கி வைத்தார்.

நகராட்சி நிர்வாக துறை சார்பில் திண்டுக்கல் கரூர் திருவேற்காடு மாங்காடு பகுதிகளில் புதிய பேருந்து நிலையம், பாதாள சாக்கடை திட்ட பணிகள்,

திருப்பூர் பெருந்துறை கோத்தகிரி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிகளில் உயர்மட்ட பாலம், குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டு திட்ட பணிகள் இதில் அடங்கும்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பட்ஜெட் கூட்டத்தொடர்

தமிழக சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

த.வெ.க. தலைமையிலான தமிழக அரசின் முதல் நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் நாளை தாக்கல் செய்யப்படுகிறது.

நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாநில நிதியமைச்சர் திரு. மரிய வில்சன் பேரவையில் சமர்ப்பிக்கிறார்.

நாளை மறுநாள் வேளாண் நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதனிடையே பட்ஜெட் நாளை தாக்கல் செய்யப்படும் நிலையில் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னை பனையூரில் இன்றுமாலை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

கலந்தாய்வு

MBBS BDS உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான முதல்சுற்று கலந்தாய்வு இன்று தொடங்குகிறது.

அகில இந்திய இட ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு வரும் 17-ம் தேதிவரை நடைபெறுகிறது.

வரும் 13-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை நடைபெறும் மாநில ஒதுக்கீட்டு கலந்தாய்வில் இடம் தேர்வு செய்தோர் வரும் 28-ம் தேதிக்குள் கல்லூரியில் சேர வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

தண்ணீர் திறப்பு

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 18 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளதாக எமது தர்மபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

கிராமசபை கூட்டம்

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நாளை சிறப்பு கிராமசபை கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

மாவட்ட அளவிலான கண்காணிப்பு அலுவலர்கள், சிறப்பு பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

கடலூரில் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டை ஒழிப்பது குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

காவல்துறையினர், பள்ளி மாணாக்கர் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த பேரணியில், போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புகள், இணையவழி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

சௌ சௌ

நீலகிரி மாவட்டத்தில் பிரதமரின் க்ருஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மானியத்துடன் சௌ சௌ எனப்படும் மேரக்காய் சாகுபடி செய்து வருவதால் அதிக லாபம் கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

திருப்பூர், திண்டுக்கல், திருச்சி, மதுரை உட்பட 8 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

திண்டுக்கல்லில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் முதல் லீக் போட்டியில் திருப்பூர் திண்டுக்கல் அணிகள் மோதுகின்றன.

முதல்கட்ட போட்டிகள் வரும் 15-ம் தேதிவரை திண்டுக்கல்லிலும்,

2-ம் கட்ட போட்டிகள் வரும் 18-ம் தேதிமுதல் 28-ம் தேதிவரை சென்னை சேப்பாக்கத்திலும் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖